**ஜூலை – 18**

# TNPSC துளிகள்

- இந்திய விமான நிலையங்கள் பொருளாதார ஒழுங்குமுறை ஆணையத் (திருத்த) மசோதா, 2019 ஆனது மாநிலங்களவையால் நிறைவேற்றப்பட்டது. இது மக்களவையில் நிறைவேற்றப்பட வேண்டி நிலுவையில் உள்ளது.
  - இது முக்கியமான விமான நிலையங்களில் வருடாந்திர பயணிகளின் எண்ணிக்கையை தற்பொழுது உள்ள 15 இலட்சத்திற்குப் பதிலாக 35 இலட்சமாக வரையறுக்கின்றது.
- ஒசானியாவின் 500 தீவுகளில் ஒன்றான பலாவு தீவுக் கூட்டமானது 121 நாடுகளைக் கொண்ட சர்வதேச சூரிய ஒளிக் கூட்டிணைவில் (International Solar Alliance - ISA) 76வது நாடாக இணைந்துள்ளது. ISA ஆனது இந்தியா மற்றும் பிரான்சு ஆகிய நாடுகளால் கூட்டாக இணைந்து 2015 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டது. இது குறித்து மேலும் அறிந்து கொள்ள இங்கே சொடுக்கவும் https://www.tnpscthervupettagam.com/international-solar-alliance/.
- மத்திய சுற்றுலாத் துறை அமைச்சகத்தின் "உன்னுடைய வியக்கத் தகுந்தவற்றைக் கண்டறிதல்" என்ற பிரச்சாரமானது 2019 ஆம் ஆண்டின் பசிபிக் - ஆசியப் பயண மன்றத்தின் (Pacific Asia Travel Association - PATA) தங்க விருதை வென்றுள்ளது.
  - இந்தப் பிரச்சாரம் "சந்தையிடல் – அரசின் முதன்மைப் பயண இலக்கு" என்ற பிரிவின் கீழ் இந்த விருதை வென்றுள்ளது.

# தேசியச் செய்திகள்

## மத்தியப் பல்கலைக் கழகங்கள் (திருத்த) மசோதா, 2019

- மத்தியப் பல்கலைக் கழகங்கள் (திருத்த) மசோதா, 2019 ஆனது நாடாளுமன்றத்தின் இரு அவைகளாலும் நிறைவேற்றப்பட்டது.
- இது பல்வேறு மாநிலங்களில் கற்பித்தல் மற்றும் ஆராய்ச்சி ஆகியவற்றிற்காகப் பல்கலைக் கழகங்களை ஏற்படுத்த வழிவகை செய்யும் மத்தியப் பல்கலைக் கழகங்கள் சட்டம், 2009ஐ திருத்த முனைகின்றது.
- இந்த மசோதா ஆந்திரப் பிரதேசத்தில் இரண்டு மத்தியப் பல்கலைக் கழகங்களின் உருவாக்கத்திற்கு வழிவகை செய்கின்றது.
  - ஆந்திரப் பிரதேச மத்தியப் பல்கலைக் கழகம்
  - ஆந்திரப் பிரதேச மத்தியப் பழங்குடியினப் பல்கலைக் கழகம்
- இதன் மூலம், கோவாவைத் தவிர இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களும் மத்தியப் பல்கலைக் கழகங்களைக் கொண்டு இருக்கின்றன.

## "இணையதள சாத்தி" திட்டம்


- கூகுள் இந்தியாவின் "இணையதள சாத்தி" என்ற திட்டமானது தற்பொழுது பஞ்சாப்

மற்றும் ஒடிசாவையும் இத்திட்டத்தில் இணைத்துள்ளது.

- இது 2015 ஆம் ஆண்டில் டாடா அறக்கட்டளையுடன் இணைந்து ஏற்படுத்தப்பட்டது.
- இந்தத் திட்டம் இணைய தளத்தை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்று கிராமப் புற பெண்களுக்கு கல்வியறிவு அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- இது  தற்பொழுது 20 மாநிலங்களில் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது.

## குல்பூஷன் ஜாதவ் – பன்னாட்டு நீதிமன்றம்

- இந்திய உளவாளி என்று குற்றம் சாட்டப்பட்ட குல்பூஷன் ஜாதவ் என்பவரின் தண்டனைக்கான உத்தரவை மறு ஆய்வு செய்யுமாறு பன்னாட்டு நீதிமன்றம் (International Court of Justice - ICJ)  பாகிஸ்தானை அறிவுறுத்தியுள்ளது. இந்நீதி மன்றம் இவரின் தூக்கு தண்டனையையும் நிறுத்தி வைத்துள்ளது.
- ICJ ஆனது எவ்வளவு விரைவில் இந்தியாவானது தூதரக ரீதியில் இவரைச் சந்திப்பதை அனுமதிக்க வேண்டும் என்று இஸ்லாமாபாத்தைக் கேட்டுக் கொண்டுள்ளது.
- 1963 ஆம் ஆண்டின் தூதரக உறவுகள் மீதான வியன்னா ஒப்பந்தத்தின் விதி 36-ஐ மீறியுள்ளதாக பாகிஸ்தான் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.
- 2016 ஆம் ஆண்டில் பாகிஸ்தான் இராணுவம் இவரை விசாரணைக்கு எடுத்துக் கொண்டவுடன், அது குறித்த தகவலை உடனடியாக இந்தியாவிடம் தெரிவிக்க பாகிஸ்தான் தவறியது.




### *ICJ பற்றி*

- ICJ ஆனது நெதர்லாந்தின் தி ஹேக்கில் அமைந்துள்ளது.
- இது 1945 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்டது.
- இது ஐக்கிய நாடுகள் பொதுச் சபை மற்றும் பாதுகாப்பு அவையினால் தேர்ந்தெடுக்கப்பட்ட 15 நீதிபதிகளைக் கொண்டுள்ளது. இவர்களின் பதவிக் காலம் 9 ஆண்டுகளாகும்.
- இந்திய உச்ச நீதிமன்றத்தின் முன்னாள் நீதிபதியான தல்வீர் பண்டாரி 2012 ஆம் ஆண்டு முதல் ICJல் நீதிபதியாக உள்ளார்.

# பொருளாதாரச் செய்திகள்

## 15வது நிதி ஆணையத்தின் பதவிக் காலம் - நீட்டிப்பு

- பிரதமர் நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அமைச்சரவையானது 15வது நிதி ஆணையத்தின் பதவிக் காலத்தை 2019 ஆம் ஆண்டு நவம்பர் 30 ஆம் தேதி வரை நீட்டித்துள்ளது.
- உள்நாட்டுப் பாதுகாப்பு மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான நிதிகளையும் உள்ளடக்க நிதி ஆணையத்தின் பரிந்துரைகளின் வரம்பை மத்திய அரசு விரிவுபடுத்தியுள்ளது.
- 2014-19 ஆகிய ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட பல்வேறு நிதி மற்றும் பட்ஜெட் சீர்திருத்தங்கள் காரணமாக இந்த நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### *நிதி ஆணையம் பற்றி*

- 15வது நிதி ஆணையமானது குடியரசுத் தலைவரின் ஆணையால் 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் N.K. சிங் தலைமையில் அமைக்கப்பட்டது.
- இது 2020 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2025 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலான 5 ஆண்டு காலகட்டத்திற்கு மத்திய மற்றும் மாநிலங்களுக்கிடையேயான நிதிப் பங்கீடுகளுக்கான விதிமுறைகள் குறித்து முடிவெடுக்கும்.

# சுற்றுச்சூழல் செய்திகள்

## கான மயில் மற்றும் வரகுக் கோழி

- பின்வரும் பறவைகளைப் பாதுகாப்பதற்காக ஒரு அவசர பதிலெதிர்ப்புத் திட்டத்தை உருவாக்குவதற்காக ஒரு உயர் நிலைக் குழுவை இந்திய உச்ச நீதிமன்றம் அமைத்துள்ளது.
    - கான மயில் (அர்டியோடிஸ் நைகிரிசெப்ஸ்)
    - வரகுக் கோழி (சைபியோடைட்ஸ் இண்டிகஸ்)






- கடந்த 50 ஆண்டுகளில் இந்த இரண்டு பறவைகளின் எண்ணிக்கையும் 80 சதவிகித அளவிற்கு வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளது. இவை தற்போது மறைந்து போகும் நிலையில் உள்ளன.

- வரகுக் கோழி (Lesser Florican) என்பது 500 – 750 கிராம் எடை கொண்ட உலகின் பறவைகளில் மிகச் சிறிய மயில் வகை பறவையாகும்.
- கான மயிலானது (Great Indian Bustard) IUCN சிவப்புப் பட்டியலில் மிக அருகிய இனமாகப் பட்டியலிடப்பட்டுள்ளது.

## உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்தின் நிலை

- ஐக்கிய நாடுகள் உணவு & வேளாண் அமைப்பு (FAO - UN Food and Agriculture Organization) மற்றும் உலக சுகாதார அமைப்பு (WHO - World Health Organization) உள்ளிட்ட இதர ஐ.நா. அமைப்புகள் இணைந்து "உலகில் உணவுப் பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து குறித்த நிலை" என்ற ஒரு அறிக்கையை வெளியிட்டுள்ளன.




- உணவு இல்லாமல் பட்டினியால் வாடும் மக்களின் எண்ணிக்கையானதுத் தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக அதிகரித்துள்ளது. தற்போது 820 மில்லியனுக்கும் மேலான மக்கள் பட்டினியால் வாடுகின்றனர்.
- உலகில் வளர்ச்சிக் குன்றிய 10 குழந்தைகளில் 9 குழந்தைகள் ஆப்பிரிக்கா மற்றும் ஆசியாவில் உள்ளனர். ஆப்பிரிக்காவில் 39.5 சதவிகித குழந்தைகளும் ஆசியாவில் 54.9 சதவிகிதக் குழந்தைகளும் வளர்ச்சி குன்றியவர்களாக உள்ளனர்.
- இந்தியாவில் ஊட்டச்சத்துக் குறைபாடு உடையவர்களின் எண்ணிக்கையானது 2004-06 ஆம் ஆண்டில் 253.9 மில்லியனிலிருந்து 2016-18 ஆம் ஆண்டில் 194.4 மில்லியனாகக் குறைந்துள்ளது.
- இந்தியாவில் வறுமைக் குறைவு விகிதம் 1987 ஆம் ஆண்டில் 48.9 சதவிகிதமாகவும் 2011 ஆம் ஆண்டில் 21.2 சதவிகிதமாகவும் 2015 ஆம் ஆண்டில் 13.4 சதவிகிதமாகவும் இருந்தது.

# மாநிலச் செய்திகள்

## மகாராஷ்டிராவில் உயிர் நீத்த இராணுவ வீரர்களுக்கு 1 கோடி ரூபாய்

- எல்லையில் தேசப் பணியின் போது உயிர் நீத்த மகாராஷ்டிராவைச் சேர்ந்த இராணுவ வீரர்கள் மற்றும் மாற்றுத் திறனாளி வீரர்களின் குடும்பங்களுக்கு வழங்கப்படும்

நிதியுதவி அதிகரிப்பிற்கு அம்மாநில அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

- ❖ உயிர் நீத்த இராணுவ வீரர்களின் குழந்தைகளுக்கு வழங்கப்படும் இழப்பீட்டுத் தொகையானது 25 இலட்சத்திலிருந்து 1 கோடியாக அதிகரிக்கப்பட்டுள்ளது.
- ❖ இது 2019 ஆம் ஆண்டு ஜனவரி 01 ஆம் தேதியிலிருந்து செயல்படுத்தப்பட இருக்கின்றது.
- ❖ இந்த முடிவு மத்தியப் பிரதேசம் உள்ளிட்ட சில மாநிலங்கள் மற்றும் மத்திய அரசினால் அறிவிக்கப்பட்ட மேம்பட்ட இழப்பீடுகளைப் பிரதிபலிக்கின்றது.

# பிரபலமானவர்கள், விருதுகள் மற்றும் நிகழ்வுகள்

## சங்கீத நாடக நிறுவனத்தின் வருடாந்திர விருதுகள்

- ❖ சங்கீத நாடக நிறுவனம் 2018 ஆம் ஆண்டிற்கான பின்வரும் மூன்று பிரிவுகளில் விருதுகளை அறிவித்துள்ளது.

### *சங்கீத நாடக நிறுவனத்தின் தோழமை விருதுகள்*

- ❖ இது உயரிய மற்றும் அரிதான ஒரு கௌரவ விருதாகும். எப்போதும் இந்த விருதைப் பெறும் நபர்களின் எண்ணிக்கை 40 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
  - ஜாகிர் ஹுசைன் (தபேலா கலைஞர்)
  - சோனல் மான்சிங் (நடனக் கலைஞர்)
  - ஜதீன் கோஸ்வாமி (பயிற்சியாளர்)
  - கல்யாண சுந்தரம் பிள்ளை (பரத நாட்டியக் கலைஞர்)

### *சங்கீத நாடக நிறுவன விருதுகள் (அகாடமி புரஸ்கர்)*

- ❖ நிகழ்த்துக் கலைகள் பிரிவில் இசை, நடனம், நாடகம், பாரம்பரியம், நாட்டார்/ பழங்குடியின இசை ஆகிய துறைகளில் 44 கலைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- ❖ இந்த விருது கலைகளில் நீடித்து விளங்கும் தனிநபரின் பணி மற்றும் பங்களிப்புகளை அங்கீகரிப்பதற்காக 1952 ஆம் ஆண்டு முதல் வழங்கப்படுகின்றது.
- ❖ இந்த விருதுகள் இந்தியக் குடியரசுத் தலைவரால் விருது வழங்குவதற்கான சிறப்பு விழாவின் போது வழங்கப்படவிருக்கின்றன.
- ❖ 2018 ஆம் ஆண்டில் விருது பெற்றவர்கள் : பரத நாட்டியத்திற்காக ராதா ஸ்ரீதர், மணிப்பூரி நடனத்திற்காக அஹம் லட்சுமி தேவி, நாடக ஆசிரியருக்காக ராஜீவ் நாயக் மற்றும் நாட்டுப்புற இசைக்காக மாலினி அவாஸ்தி.

### *உஸ்தாத் பிஸ்மில்லாஹ் கான் யுவ புரஸ்கர்ஸ்*

- ❖ நிகழ்த்துக் கலையில், அவரவருடைய துறையில் சிறந்து விளங்கும் இளம் திறமையாளர்களைக் கௌரவிப்பதற்காக 40 வயதிற்குக் கீழுள்ள 32 இளம் கலைஞர்கள் இந்த விருதுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.
- ❖ சங்கீத நாடக நிறுவனத்தின் தலைவர் இந்த விருதுகளை வழங்குகின்றார்.

# முக்கிய தினங்கள்

## சர்வதேச மலாலா தினம் – ஜூலை 12

- பெண் கல்விக்காகப் பணியாற்றும் பாகிஸ்தானைச் சேர்ந்த புகழ்பெற்ற ஆர்வலரான மலாலா யூசப்சாய் என்பவரை கௌரவிப்பதற்காக ஜூலை 12 ஆம் தேதியை சர்வதேச மலாலா தினமாக ஐக்கிய நாடுகள் அறிவித்துள்ளது.
- பெண் கல்வியின் மீதான மலாலாவின் நிலைப்பாட்டின் காரணமாக 2012 ஆம் ஆண்டில் தலிபான்கள் இவரைச் சுட்டனர்.
- இவர் அதிலிருந்து மீண்டு உயிர் பிழைத்து, தற்பொழுது பெண் கல்விக்கான சர்வதேசத் தூதுவராக உள்ளார்.
- 2014 ஆம் ஆண்டில் அமைதிக்கான நோபல் பரிசை வென்ற இளம் வயது வெற்றியாளர் இவராவார். அப்போது இவருடைய வயது 17.
- அந்த ஆண்டின் அமைதிக்கான நோபல் பரிசை இந்தியாவைச் சேர்ந்த குழந்தை உரிமைகள் நல ஆர்வலரான கைலாஷ் சத்யார்த்தி என்பவருடன் இவர் பகிர்ந்து கொண்டார்.
- இவர் 2013 ஆம் ஆண்டு ஜூலை 12 அன்று பெண் கல்விக்காக ஐ.நா.வில் தனது புகழ்பெற்ற சிறப்பு உரையை நிகழ்த்தினார்.

## காமராஜரின் 117வது பிறந்த தினம் – ஜூலை 15

- தமிழ்நாட்டின் முன்னாள் முதல்வரான மறைந்த K. காமராஜரின் 117வது பிறந்த தினமான ஜூலை 15 அன்று, அவருடைய மணிமண்டபத்தை தமிழ்நாடு முதல்வர் திறந்து வைத்தார்.
- அவரது மணிமண்டபம் விருதுநகரில் கட்டப்பட்டுள்ளது.



- 2006 ஆம் ஆண்டு அப்போதைய முதல்வர் கலைஞர் காமராஜரின் பிறந்த தினமான ஜூலை 15 ஆம் தேதியை “கல்வி வளர்ச்சி தினமாக” அறிவித்தார்.
- 2006 ஆம் ஆண்டு முதல் இத்தினம் “கல்வி வளர்ச்சி தினமாக” அனுசரிக்கப்படுகின்றது.

- - - - - - - - - - - - - - -